## பாடம்: 2 - ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**வகுப்பு : III**

**பாடம் : தமிழ்**

### அ. கடினச் சொற்கள்

1. ஒற்றுமை 2. வலிமை 3. தண்ணீர் 4. பாதுகாப்பு
5. நண்பர்கள் 6. மாதம் 7. விலங்குகள் 8. பாலைவனம்

### ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. மரங்கள் இல்லாமல் குளிர்ச்சி இல்லையே! என்றது **மான்.**
2. எந்த கிழங்கும் கிடைக்கவில்லை என்றது **முயல்.**
3. மனிதர்கள் காட்டுக்குள் **மரங்களை** வெட்டினர்.
4. எல்லோரும் **ஒற்றுமையாக** இருக்க வேண்டும்.

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. ஒத்துக்கொள்கிறோம் - இச்சொல்லின் பொருள்______

   அ) விலகிக் கொள்கிறோம் **ஆ) ஏற்றுக் கொள்கிறோம்**

   இ) காத்துக் கொள்கிறோம் ஈ) நடந்து கொள்கிறோம்

2. 'வேட்டை+ஆட' இச்சொல்லை சேர்த்து எழுதக் கிடைப்பது_____

   அ) வேட்டையட **ஆ) வேட்டையாட** இ) வேட்டைஆடு ஈ) வெட்டையாட

3. மரங்களிடையே - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______

   அ) மரம்+இடையே **ஆ) மரங்கள்+இடையே**

   இ)மரங்கள்+கிடையே ஈ) மரங்கல்+ இடையே

4. அங்குமிங்கும் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______

   அ) அங்கு+மிங்கும் **ஆ) அங்கும்+இங்கும்**

   இ) அங்கு+இங்கும் ஈ) அங்கும்+இங்கு

5. 'மரங்களுடன் இருந்தால் தப்பித்திருக்கலாம்' - என்று கூறியது______

   அ) சிங்கம் ஆ) புலி இ) முயல் **ஈ) மான்**

### ஆ. புதிர்களைப் படித்து, விடையைக் கண்டறிக.



1. காட்டின் அரசன் ஆவான்; நெருப்பு போன்ற கண்கள் உடையவன்; முழக்கமிடுவான் - அவன் யார்? **சிங்கம்**



2. என் உடலில் புள்ளிகள் உண்டு. நான் துள்ளித் துள்ளி ஓடுவேன். நான் யார்? **மான்**



3. வேர்பிடித்து வளர்ந்திடுவேன்; தண்ணீரை உறிஞ்சிடுவேன்;

மழைபெற உதவிடுவேன் - நான் யார்? **மரம்**

## இ. எந்த மரத்திலிருந்து என்ன பொருள்? பொருத்துவோமா?



## ஈ. குழுவில் சேராததை வட்டமிடுக.

1. மயில், கிளி, புறா, **புலி**, கோழி
2. ஆறு, ஏரி, குளம், **மலை**, குட்டை
3. தாயம், பல்லாங்குழி, ஐந்தாங்கல், சதுரங்கம், **மட்டைப்பந்து**
4. வெண்மை, கருமை, **மென்மை**, பசுமை, செம்மை
5. கத்தரி, வெண்டை, தக்காளி, **தென்னை**, மிளகாய்

## உ. சொல் விளையாட்டு

1. பாலம் 2. பாரம் 3. பாடம்

4. பாதம் 5. பாசம்




## ஊ. வினாக்களுக்கு விடையளி

**1. மரங்கள் எவற்றுடன் சண்டையிட்டன?**

மரங்கள் விலங்குகளுடன் சண்டையிட்டன.

**2. காட்டைவிட்டு எவை வெளியேறின?**

காட்டை விட்டு விலங்குகள் வெளியேறின.

**3. விலங்குகளும் மரங்களுக்கும் போட்டி வரக் காரணம் யாது?**

விலங்குகளுக்கும் மரங்களுக்கும் இடையே ஒற்றுமை இல்லாததே போட்டிவரக் காரணம் ஆகும்.

**4. கதையின் மூலம் நீ அறிந்து கொண்டதை எழுதுக**

இக்கதையின் மூலம் ஒற்றுமையாக வாழ வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை அறிந்து கொண்டேன்.